தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1975 அக்டோபர் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Scheme to encourage Nadaswara Instruments Manufacturers

* 21 *Q*.—THIRU KU. MA. BALASUBRAMANIAM (on behalf of THIRU G. N. RAJU) : Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any Scheme to encourage the community which manufactures Nadaswara Instruments so that the Nadaswara music may not become obsolete?

நாதசுர இசைக் கருவி செய்வோரை ஊக்குவிக்க திட்டம்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் (திரு. ஜி. என். ராஜு சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

நாதசுர இசை நசித்துப் போகாமல் இருக்க, அந்த இசைக் கருவியைச் செய்யும் வகுப்பினரை ஊக்குவிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த நாதஸ்வரக் கருவி எந்த மரத்திலிருந்து, எந்த மாவட்டத்தில், எந்த வகுப்பினரால் செய்யப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; துணைத் தலைவர் அவர்களே, நாதஸ்வரக் கருவியை சென்னையில் உள்ள தமிழ் இசைக் கல்லூரியில் தயாரிக்க பயிற்றுவிக்கப்படுகிறது. அதைப்போல் திருவையாறு கல்லூரியிலும், பழநி கல்லூரியிலும் பயிற்றுவிக்கின்றார்கள். அதற்கு மூன்றாண்டு, நான்காண்டு கால பயிற்சிகள் வைத்திருக்கின்றார்கள்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: "குழலினிது—யாழினிது" என்று குறளினிலே கூறப்பட்டிருப்பது இந்த நாதஸ்வரக் குழலேயா, அல்லது வேய்ங்குழலேயா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: குழல் என்பது முல்லாங்குழல்தான்.

திரு. எல். பலராமன்: பண்டைக்கால இசைக் கருவிகளை மக்களிடையே பரப்புவதற்கும், தமிழின் மேன்மையையும், தமிழரின் பண்பாட்டையும் வளர்ப்பதற்கும் அரசிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன். அந்தப் பண்டைக்காலக் கருவிகள் என்னென்ன என்பதுபற்றி அரசிடம் பட்டியல் இருக்கிறதா என்றும் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நாதஸ்வர கலைஞர்களையும் தவில் கலைஞர்களையும் பலவேறு வகைகளில் பாராட்டுவதற்கு பல்வேறு திட்டங்களை இயல்—இசை—நாடக மன்றம் மேற்கொண்டுள்ளது. அந்தப்பயிற்சி கெடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக—தனித்தனியாக அவர்கள் பயிற்சி தனியாரிடம் பெற்று வருகின்றார்கள் என்றாலும்—நான் குறிப்பிட்ட இசைக் கல்லூரிகளிலும் பயிற்சி தரப்பட்டு வருகிறது. இதுவரையில் 18 நாதஸ்வர கலைஞர்களையும், 15 தவில் கலைஞர்களையும் தேர்ந்தெடுத்துப் பாராட்டியிருக்கிறோம். 1960 ஆம் ஆண்டிலிருந்து 18 நாதஸ்வர கலைஞர்களுக்கும் 15 தவில் கலைஞர்களுக்கும் "கலைமாமணி" பட்டம் அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் வழங்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், வயது அதிகமாகி, தொழில் நடத்த முடியாமல் போனவர்களுக்கு வாழ்க்கை நடத்த உதவிச் சம்பளமும் தந்து வருகிறோம். அந்த வகையில் 97 நாதஸ்வர கலைஞர்களும், 55 தவில் கலைஞர்களும் தற்பொழுது பென்ஷன் தொகையைப் பெற்றுவருகின்றார்கள். அது மட்டுமல்லாமல், நாதஸ்வர மேதைகள் 4 பேர்கள், மற்றும் தவில் மேதைகள் 4 பேர்கள் திருவுருவப்படங்களை ஆண்டுதோறும் நடைபெறுகின்ற விழாவில் திறந்து வைத்து, அவர்களைப் பாராட்டுகின்ற முறையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், ஏற்கெனவே "கலைமாமணி" சிறப்பு பெற்றவர்களுக்கு ஆயிரம் ரூபாயும், பொற்கிழியும் வழங்குகின்ற திட்டமும் கொண்டுவந்து, சென்ற ஆண்டு 10 கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வழங்கியிருக்கிறோம். அந்த 10 கலைஞர்களிலே ஒருவர் நாதஸ்வர கலைஞர். ஆக இப்படியெல்லாம் ஊக்கம் அளிக்கின்றோம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இந்தக் கேள்வி கருவியைச் செய்யும் வகுப்பினரை ஊக்குவிக்க திட்டம் ஏதாவது உண்டா என்பது பற்றி அமைச்சர் அவர்கள் கலைஞர்களைப்பற்றி பதில் சொல்கிறார்களே தவிர, அந்தக் கருவியைச் செய்யும் வகுப்பினர் களைப்பற்றி பதில் சொல்லவில்லை. அதைச் செய்யும் வகுப்பினர் தச்சர்கள். தற்போது நாட்டில் திருவானைக்கோயில், நரசிங்கப்பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் அவர்கள் இருக்கின்றார்கள்..........

[1975 அக்டோபர் 27]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கேள்வி கேட்கலாம். விளக்கம் உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அவர்களுக்குச் சரியான முறையில் "ரா—மெட்டீரியல்ஸ்", குறிப்பாக மரம் கிடைக்காததால், அந்தத் தொழில் நசித்துபோகிற நிலையில் இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி எந்த விதமான விண்ணப்பமும் வரவில்லை. இசைக் கருவி செய்யும் வகுப்பினரை ஊக்குவிக்கும் முறையில், தனியார் துறைகளில், தனியார்களே இதிலே உள்ள வல்லுநர்களே அந்தக் கருவிகளைச் செய்யும் பணியிலே ஈடுபடுத்துகின்றார்கள். அந்தக் கருவிகளை செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டு, அதனால் எதிர் காலத்தில் அந்தத் தொழில், நசித்துப்போகும் ஒரு நிலை வந்து, அதற்கு உதவித் தொகையோ, உதவி செய்ய வேண்டும் என்றோ, "ரா—மெட்டீரியல்ஸ்" வேண்டும் என்றோ அவர்கள் விண்ணப்பித்தால் அரசு அதுபற்றி கவனிக்கும்.

திரு. ம. மாசிலாமணி: இந்த நாதஸ்வர இசைக் கருவி செய்பவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நரசிங்கப்பட்டியில் இருக்கின்றார்கள் என்பதையும் அவர்கள் இவற்றைச் செய்து வருகின்றார்கள் என்பதையும் அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்திலே இல்லை.

திரு. எ. பாலசுப்பிரமணியம்: நாதஸ்வர இசையின் மூலம் விவசாயப் பயிர்களை வளர்க்க முடியுமா என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடைபெற்றதே, அதன் முடிவு என்னவென்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது வேறு துறையைப் பற்றிய கேள்வி என்றாலும்கூட, இதில் ஓரளவுக்கு உண்மை இருக்கிறது. அப்போது விளம்பரப்படுத்தப்பட்ட அளவுக்கு அவ்வளவு பெரிய விளைவுகள் இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது. எந்த உயிருக்கும் இசையின் மூலம் ஏற்படுகின்ற அலைகளினால் ஓரளவுக்கு சலனங்கள் ஏற்படும் என்று கண்டுபிடித்திருக்கின்றார்கள். ஆனால் விளம்பரப்படுத்தும் அளவுக்கு பெரும் பயன் இல்லை.

THIRU G. VASANTHA PAI: Sir, why should not the Government make this Nadaswaram-playing compulsory for every Deepavali as well as for marriages so that those people might be encouraged?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நாம் கட்டாயப் படுத்தும் அவசியம் இல்லாமல், அது எல்லா விழாக்களிலும் முன்னணியில் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: சிதம்பரத்திலேயுள்ள விவசாயப் பண்ணைகளிலும் இசையின் மூலமாக பயிர்கள் நல்ல முறையில வளரும் என்று சொன்னார்கள். அந்த இசை நம்முடைய தென்னிந்திய இசையா அல்லது வெளிநாட்டு இசையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்பமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லாவிதமான இசையிலும் வளரலாம்.

Gazetted Headmasters in Government 'B' Wing High Schools

* 22 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that there are two categories of Gazetted Headmasters in the Government 'B' Wing High Schools in the State, one category promoted as Gazetted Headmasters in accordance with their seniority in the State as the Unit and the other with the Revenue District as the Unit; and

(b) if so, whether the Gazetted Headmasters promoted from the latter category are eligible for promotion as District Educational Officers as provided for in G.O. Ms. No. 1786, Education, dated 17th October 1974?

அரசினர் 'B' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளின் அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேற்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம்மாநிலத்தில் அரசினர் 'B' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில், மாநிலம் முழுவதையும் ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு தத்தம் பணி மூப்பு நிலைக்கிணங்க பதவி உயர்வு பெறுகின்ற அரசிதழ் பதவி பெற்ற தலைமை ஆசிரியர்கள் என்று ஒரு வகையினரும், வருவாய் மாவட்டத்தை ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு தத்தம் பணி முப்பு நிலைக்கிணங்க பதவி உயர்வு பெறுகின்ற அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் என்ற இன்னொரு வகையினரும் ஆக, இரு வகையினர் உள்ளனர் என்பது உண்மையா?